Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 02.05.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 02.05.2026 – சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

தலைப்புச் செய்திகள்

வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு விலை உயர்த்தப்பட்டதற்கு மேற்காசியாவில நிலவி வரும் சூழலே காரணம் என்று மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

புதுச்சேரியிலுள்ள 30 தொகுதிகளில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி நாளை மறுநாள் நடைபெறுகிறது.

இளநிலை மருத்துவ படிப்புக்கான **நீட்** நுழைவு தேர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் நடைபெறுகிறது.

புதுச்சேரி பள்ளி கல்வி இயக்ககம் சார்பில் மாணவர்களுக்கான "கோடை கொண்டாட்டம்" இலவச பயிற்சி முகாம் ஜவஹர் பால் பவனில் இன்று தொடங்கியது.

தினேஷ் குமார் (14)

கடற்படை தலைமைத் தளபதி அட்மிரல் தினேஷ் குமார் திரிபாதி இன்று முதல் 4 நாள் அரசுமுறை பயணமாக, மியான்மர் சென்றுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது மியான்மரின் தலைமை தளபதி அந்நாட்டுப் பாதுகாப்புத்துறை அமைச்சர் மற்றும் ஆயுதப்படை அதிகாரிகள் உள்ளிட்டோருடன் இருதரப்பு பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளவுள்ளார். இருநாடுகளுக்கிடையேயான கடல்சார் ஒத்துழைப்பு குறித்து மறு ஆய்வு செய்யப்படும். மேலும், கடற்படைகளுக்கிடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்த வழிகள் ஆராயப்படவுள்ளன. மியான்மரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் திரு. தினேஷ் குமார், போர் நினைவிடத்திலும் அஞ்சலி செலுத்தவுள்ளார். அவரது இந்தப்பயணம் இருநாடுகளுக்கிடையே பரஸ்பர நட்புறவு, நம்பிக்கை, கடல்சார் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை உள்ளிட்டவை உறுதிப்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரல்ஹாத் ஜோஷி (08)

வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு விலை உயர்த்தப்பட்டதற்கு மேற்காசியாவில நிலவி வரும் சூழலே காரணம் என்று மத்திய நுகர்வோர் விவகாரங்களுக்கான அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார். புதுடெல்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்து வருவதைச் சுட்டிக்காட்டினார். இருப்பினும், பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு விலை உயர்த்தப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டிய அவர்,

பெட்ரோலியப் பொருட்களின் தடையற்ற விநியோகத்தை மத்திய அரசு உறுதி செய்து வருவதாகவும் கூறினார்.

ராம்மோகன் நாயுடு (09)

ஆந்திர மாநிலத்தின் வளர்ச்சிக்காக மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து பணியாற்றி வருவதாக சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம் மோகன் நாயுடு கூறியுள்ளார். ஸ்ரீகாகுளம் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்துப் பேசிய அவர், மீனவர்கள் வசிக்கும் கிராமங்களில் சூரிய மின்சக்தியால் இயங்கும் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். முதல்கட்டமாக நூறு கிராமங்களில் ஆயிரத்து 400 சூரிய சக்தி மின் விளக்குகள் நிறுவப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

ஜிதேந்திர சிங் (09)

மே மாதத்தில் எதிர்பார்க்கப்படும் வெப்பச்சூழல் குறித்து பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை என்று புவி அறிவியல் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார். நாட்டில் சில பகுதிகளில் இயல்பைவிட அதிகமான வெப்பச்சூழல் மற்றும் வெப்ப அலை நிலவக்கூடும் என்றாலும், இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிடும் அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன் மூலம் இந்தச் சூழலை திறம்படக்

கையாள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் **எல் நினோ** சூழல் உருவாக வாய்ப்புள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

உச்ச நீதிமன்றம் (08)

சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையின் போது வாக்கு எண்ணும் பார்வையாளர்களாக மத்திய அரசு ஊழியர்களை மட்டுமே நியமனம் செய்ய உத்தேசித்துள்ள தேர்தல் ஆணையத்தின் முடிவில் தலையிட உச்ச நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது. வாக்கு எண்ணும் அலுவலர்களை தேர்ந்தெடுப்பது தேர்தல் ஆணையத்தின் உரிமை என்று கூறியுள்ள நீதிமன்றம், வாக்கு எண்ணப்படும் ஒவ்வொரு மேசையிலும் ஏற்கனவே முகவர்கள், கண்காணிப்பாளர்கள், தேர்தல் பார்வையாளர்கள் இருப்பதை சுட்டிக்காட்டியுள்ளது.

வாக்கு எண்ணிக்கை (11)

புதுச்சேரி, அஸாம், கேரளம், தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கம் ஆகிய 5 மாநிலங்களுக்கு நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தல்களில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி நாளை மறுநாள் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் விரிவான முறையில் செய்யப்பட்டு வருகின்றன. புதுச்சேரியில் நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில்

பதிவான வாக்குகளை எண்ணும் மையங்களில் 3 அடுக்குப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான திரு. குலோத்துங்கன் தெரிவித்துள்ளார். லாஸ்பேட்டை மகளிர் பொறியியல் கல்லூரி, தாகூர் கலைக்கல்லூரி மற்றும் மோதிலால் நேரு அரசு பாலிடெக்னிக் கல்லூரி ஆகிய 3 மையங்களில் வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளதாகவும், இம்மையங்களில் மத்திய ஆயுதப்படை மற்றும் மாநில காவல்துறை இணைந்து 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,... **(வாய்ஸ்)**

வாக்கு எண்ணிக்கை ஏனாம் (10)

புதுச்சேரி பிராந்தியமான ஏனாம் சட்டமன்ற தொகுதியில் பதிவான வாக்குகள் அங்குள்ள டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அரசு கலைக் கல்லூரியில் எண்ணப்பட உள்ளன. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளதாக மண்டல நிர்வாகியும், தேர்தல் அதிகாரியுமான திரு.சிவராஜ் மீனா தெரிவித்துள்ளார். வாக்கு எண்ணும் அதிகாரிகள் மற்றும் கட்சி முகவர்கள் உட்பட 136 நபர்கள் மட்டுமே வாக்கு எண்ணும் மையத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள் என்றும், அனைத்து செயல்பாடுகளும் சிசிடிவி கேமராக்களில் பதிவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், பகல் 12 மணிக்குள் முடிவுகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேற்கு வங்கம் (07)

மேற்கு வங்க மாநிலம் Magrahat மற்றும் Diamond Harbour தொகுதிகளுக்குட்பட்ட 15 வாக்குச்சாவடிகளில் மறு வாக்குப்பதிவு இன்று நடைபெற்றது. இந்த வாக்குச் சாவடிகளில் கடந்த மாதம் 29ஆம் தேதி நடைபெற்ற 2ஆம் கட்ட சட்டப்பேரவைத் தேர்தலின்போது சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் தேர்தல் பார்வையாளர்களிடம் இருந்து பெறப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் இந்த மறு வாக்குப்பதிவிற்கு உத்தரவிட்டிருந்தது

ஜவஹர் சிறுவர் இல்லம் (08)

புதுச்சேரி பள்ளி கல்வி இயக்ககம் சார்பில் மாணவர்களுக்கான "கோடை கொண்டாட்டம்" இலவச பயிற்சி முகாம் இன்று தொடங்கி வரும் 31-ஆம் தேதி வரை, புதுச்சேரி ஜவஹர் பால் பவனில் நடைபெறுகிறது. மேலும், காலாப்பட்டு, லாஸ்பேட்டை உள்ளிட்ட 9 இடங்களில் அமைந்துள்ள ஜவஹர் சிறுவர் இல்லங்களில் காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்த முகாம் குறித்து ஜவஹர் சிறுவர் இல்ல தலைமை ஆசிரியர் திரு.மணிவேல் கூறுகையில் ... **(வாய்ஸ்)**

நீட் -1 (18)

எம்பிபிஎஸ், பல் மருத்துவம் உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புக்கான **நீட்** நுழைவு தேர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் மதியம் 2 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறுகிறது. நாடுமுழுவதும் தமிழ், ஆங்கிலம், இந்தி உட்பட 13 மொழிகளில் நடைபெறும் இத்தேர்வினை 22 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் எழுதுகின்றனர். புதுச்சேரி, பிராந்தியத்தில் புதுச்சேரி பல்கலைக்கழகம், தொழில்நுட்ப பல்கலைக் கழகம் உள்ளிட்ட 9 மையங்களில் நடைபெறும் நீட் தேர்வினை 4, ஆயிரத்து 440 பேர் எழுத உள்ளனர். நீட் தேர்வினையொட்டி பல்வேறு கட்டுபாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. தேர்வர்கள் அரை கை கொண்ட வெளிர் நிற ஆடைகளை மட்டுமே அணிந்து வர வேண்டும். முழுக்கை கொண்ட சட்டைகள் அல்லது ஆடைகளை அணிய அனுமதி இல்லை. இருபாலரும் எக்காரணத்தை கொண்டும் ஷூக்கள் அணிய கூடாது. தேர்வர்கள் காதணிகள், மோதிரங்கள், பதக்கங்கள், கழுத்தணிகள், வளையல்கள், கொலுசுகள் போன்ற எவ்விதமான நகைகளையோ, ஆபரணங்களையோ அணிந்து வரக்கூடாது. தேர்வர்கள், தேர்வு மையத்துக்கு முன்கூட்டியே வர வேண்டும். செல்போன்கள் உள்ளிட்ட மின்னணு சாதனங்களையும் தேர்வு அறைக்குள் கொண்டுசெல்ல அனுமதி இல்லை.

நீட் -2 (05)

தண்ணீர் பாட்டில்கள் மற்றும் உணவு பொருட்கள் உள்ளே அனுமதிக்கப்பட மாட்டாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தியா மட்டுமல்லாமல் துபாய், அபுதாபி, தோஹா, சிங்கப்பூர் உள்ளிட்ட 14 இடங்களிலும் நீட் தேர்வு நடைபெறுகிறது.

எய்ம்ஸ் (08)

புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை நோயாளிகளின் படுக்கை அருகிலேயே பயன்படுத்தக் கூடிய கையடக்க எம்.ஆர்.ஐ. கருவியை இந்தியாவிலேயே முதன்முதலாக அறிமுகப்படுத்தியுள்ளது. இது தீவிர சிகிச்சைப் பிரிவுகள், அவசர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் அறுவை சிகிச்சைப் பிரிவுகளில் உள்ள, உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கும் நோயாளிகளுக்கு விரைவான மூளைப்படம் எடுப்பதை சாத்தியமாக்குகிறது. இந்த கருவியை சக்கரங்கள் மூலம் நேரடியாக நோயாளிகளிடம் கொண்டு செல்ல முடியும்.

கிரிக்கெட் (06)

ஐபிஎல் 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்றிரவு 7.30 மணிக்கு சென்னையில் தொடங்கும் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ்-மும்பை இண்டியன்ஸ் அணிகள் களம் காணுகின்றன. போட்டியில் தொடர, வெற்றி பெறவேண்டிய கட்டாயத்தில் இரு அணிகளும்

களமிறங்கும் நிலையில் இன்றைய ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு விலை உயர்த்தப்பட்டதற்கு மேற்காசியாவில நிலவி வரும் சூழலே காரணம் என்று மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

புதுச்சேரியிலுள்ள 30 தொகுதிகளில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி நாளை மறுநாள் நடைபெறுகிறது.

இளநிலை மருத்துவ படிப்புக்கான **நீட்** நுழைவு தேர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் நடைபெறுகிறது.

புதுச்சேரி பள்ளி கல்வி இயக்ககம் சார்பில் மாணவர்களுக்கான "கோடை கொண்டாட்டம்" இலவச பயிற்சி முகாம் ஜவஹர் பால் பவனில் இன்று தொடங்கியது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது SS/CN/VM